**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டி.**
**முன்னிலை: திரு.A.கண்ணன், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), ஆண்டிபட்டி.**
**2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம்நாள் செவ்வாய்கிழமை**

**I.A No.8/2024**

**in**

**O.S. No. 99/2019**

1) சந்திரன்
2) சி. முத்துக்குமார் .... மனுதாரர்கள் /4, 5 பிரதிவாதிகள்

– எதிர் –

1) C.பவுன்ராஜ் ... 1ம் எதிர்மனுதாரர்/ வாதி

– எதிர் –

2) C.பால்ராஜ்
3) திருமதி.தெய்வக்கனி
4) திருமதி.லட்சக்கனி
5) உயர்திரு.தேனி சார்பதிவாளர் அவர்கள்
6) உயர்திரு. தேனி மாவட்ட பதிவாளர், அவர்கள்
7) பா.சுமன்ராஜ்
8) பா.சுஜிதா
9) உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள், ஆண்டிபட்டி.
10) உயர்திரு.தனித்தாசில்தார் (பட்டா மாறுதல் பிரிவு) ஆண்டிபட்டி
11) உயர்திரு.மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், தேனி

... 2 முதல் 11 எதிர்மனுதார்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 6 முதல் 12 பிரதிவாதிகள்

இம்மனுவானது, 03-10-2024 ம்தேதி I.A.No.8/2024 ஆக இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பிரபாகரன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம்எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை

இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று 17–12–2024ம் தேதியன்று இந்நீதிமன்றம் வழங்கலான...

**உத்தரவு**

1. மனுதார்கள் தரப்பில் அசல் வழக்கில் 15–03–2024ம்தேதியன்று 2ம் மனுதாரர்/5ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்ய உத்தரவிடக்கோரி சிபிசி கட்டளை 9 விதி 7–ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்.**

அசல் வழக்கானது வாதியால் முதலில் நிரந்தர நிலையுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி அசல் வழக்கின் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. அசல் வழக்கில் மனுதாரர்கள் 4, 5 பிரதிவாதிகளாகிய மனுதார்களும், அவரது சகோதரரும் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்தார். இந்நிலையில் 5ம் பிரதிவாதியாகிய 2ம் மனுதாரர் பெயர் அசல் வழக்கில் தவறுதலாக பாலாஜி என கூறி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அசல் வழக்கில் ஆஜராகி 2ம் மனதாரர்/5ம் பிரதிவாதியாகிய மனுதாரர்கள் பெயர் தவறு என சுட்டிக்காட்டி குறிப்பாணை தாக்கல் செய்திருந்தார். இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டு வந்தது. மனுதாரர்கள் பெயர் முத்துக்குமார் என்பதனை திருத்தம் செய்யும் பொருட்டு அசல் வழக்கின் வாதியான மனுவின் 1–ம் எதிர்மனுதாரர்கள் இடைநிலை மனு I.A.No.3/2020 மனு தாக்கல் செய்து, அதுபின் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அசல் வழக்கில் வழக்குமூலங்களை சேர்த்து திருத்தங்கள் செய்யும் வகையில், புதிய வழக்கு தரப்பினர்களை சேர்ப்பதற்காக அசல்

வழக்கின் வாதி இடைநிலை மனு தாக்கல் செய்து, அது I.A.No.4/2020 என எண்ணிடப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில், 1ம் பிரதிவாதி தரப்பினரும், 4ம் பிரதிவாதி தரப்பினரும் (மனுதாரர்கள் தரப்பு) கடந்த 12-02-2021ம் தேதி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை எனக்கூறி ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர். 5ம் பிரதிவாதியாகிய மனுதாரர்கள் பெயர் திருத்தத்திற்காக வழக்கில் வாய்தா ஏற்பட்டு வந்துள்ளது. அசல் வழக்கில் வாதி திருத்தங்கள் மேற்கொண்டு அதற்கான நீதிமன்ற கட்டணங்கள் செலுத்தாத நிலையில், அசல் வழக்கானது வாதி தரப்பு தவறுகைக்காக 30-06-2022ம் தேதி தள்ளுபடியாகி உள்ளது. அதுவரையில் மனுதாரர்கள் பெயரை முறையாக மாற்றி திருத்தாததால், அவர் ஒருதலைபட்சமாக்கப்படாத நிலையில், மனுதாரர்கள் தரப்பிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாமல் இருந்து வந்தது. மனுதாரரும் அவரது சகோதரரும் அதாவது 4, 5 பிரதிவாதிகள் சொத்தை கூட்டாக கிரையம் வாங்கியுள்ள நிலையில், அதனைப் பொறுத்து சேர்த்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது என்பதே உண்மையாகும். இந்நிலையில், அசல் வழக்கினை வாதி தரப்பினர் Restore செய்ய மனுத்தாக்கல் செய்து, அதனடிப்படையில் அசல் வழக்கானது Re-store செய்யப்பட்டு மீண்டும் கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக மனுதாரர்களுக்கு தெரிய வருகிறது. 4ம் பிரதிவாதியாகிய மனுதாரரும், 5ம் பிரதிவாதியும் உடன்பிறந்த சகோதரர்கள். 1ம் பிரதிவாதியும் அதே வழக்கறிஞர் நியமனம் செய்த நிலையில், வழக்கு நடவடிக்கை மேற்கொண்டு வரப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. 1ம் பிரதிவாதி வாதிக்கும், 2, 3 பிரதிவாதிகளுக்கும் உடன்பிறந்த சகோதரர். அவர் தரப்பில் ஒத்துழைப்பில்லாமல் இருந்து வந்தது. இந்நிலையில் அசல் வழக்கில் 2, 3 பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ள தெய்வக்கனி, லட்சக்கனி ஆகியோர்கள்

தேனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாரர்கள் மீதும் இதர வழக்கு தரப்பினர்கள் மீதும் இதே வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்து, அ.வ.எண்.278/2021 என்ற எண்ணில் நிலுவையில் இருந்து வந்தது. இந்நிலையில், வழக்கில் மனுதாரர்கள் தரப்பு வழக்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு வேறு வழக்கறிஞரை நியமனம் செய்திருந்தோம். ஆண்டிபட்டி டி.மு.கோர்ட் அ.வ.எண்.99/2019 மற்றும் தேனி கூடுதல் மாவட்ட நீதிமன்ற வழக்கான அ.வ.எண்.278/2021 வழக்கு ஆகிய இரு வழக்குகளிலும் ஒரே வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு நடவடிக்கை மேற்கொள்ள, நடவடிக்கை மேற்கொண்டு வந்தார். இந்நிலையில் தேனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கில் மனுதாரர்கள் நியமித்த வழக்கறிஞர் ஆஜராகி மனுதாரர்கள் தரப்பு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எண்ணியிருந்தோம். மனுதாரர்கள் தந்தைக்கு ஏற்பட்ட கடன் பிரச்சனைகள் காரணமாக குடும்பத்தில் பலவாறு பிரச்சனைகள் ஏற்பட்டு வந்தது. மனுதாரர்கள் கடந்த 1 ½ வருடங்களாக மஞ்சள்காமலை நோய்க்கு நாட்டு மருத்துவ சிகிச்சை எடுத்து வருகிறார். மனுதாரர் சகோதரரான 5ம் பிரதிவாதி முத்துக்குமார் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வரும் நிலையில், அவர் வெளிமாநிலங்களுக்கு லாரி ஓட்டுநராக சென்று அவ்வப்போது சொந்த ஊருக்கு திரும்பி வருவார். மேற்படி காரணங்களினால் அசல் வழக்கு சம்மந்தப்பட்ட நடவடிக்கைகளை சரிவர மேற்கொள்ள இயலாமல் போய்விட்டது. மனுதாரர்களுக்கு அ.வ.எண்.278/2021–ல் ஆஜராகியிருந்த வழக்கறிஞர், வழக்கு நடவைக்கைகளையும் சேர்த்து நடத்த கூறியிருந்தார். ஆனால் மனுதாரர்கள் தரப்பில் வழக்கில் வழக்கு நடவடிக்கைகள்

மேற்கொள்ளாததால் மனுதாரர்கள்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள சங்கதிகள் மனுதாரர்களுக்கு தற்சமயமே தெரிய வருகிறது. மனுதாரர்களுக்கு தேனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த வழக்கறிஞர் வழக்கில் 8, 9 பிரதிவாதிகளுக்கு ஆஜராகியுள்ளதாகவும் தெரிய வருகிறது. உண்மையில் 2024ம் வருடம் தொடர் கடன் பிரச்சனை காரணமாக மனுதாரர்கள் தந்தை தற்கொலை முயற்சி செய்துகொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டு க.விலக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வந்த நிலையில், மனுதாரர்கள் குடும்பத்தில் தொடர்ந்து பிரச்சனைகள் ஏற்பட்டு வந்தது. மனுதாரர் குடும்ப பிரச்சனை காரணமாகவும், மனுதாரருக்கு ஏற்பட்ட மஞ்சள்காமாலை நோயினாலும் மற்றும் உடல்நலக் குறைவினாலும், 2ம் மனுதாரர் தொழிலுக்காக வெளியூறுக்கு வேலைக்குச் சென்றதாலும், வழக்கு நடவடிக்கைகளில் ஏற்பட்ட குழப்பங்களினாலும், 1ம் பிரதிவாதி நடவடிக்கைகளை உரிய நேரத்தில் முறையாக மேற்கொள்ள இயலாமல் போய்விட்டது. இந்நிலையில் 15-03-2024ம் தேதியன்று 5ம் பிரதிவாதி தரப்பினரும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்ச மாக்கப்பட்டுள்ளார். மனுதாரரது தரப்பு தவறுகையானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும். மனுதாரர்கள்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவானது நீக்கரவு செய்யாமல் போனால் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். இத்துடன் மனுதாரர்கள் தரப்பு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளார். எனவே நீதிமன்றம் பிறப்பித்த ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

3. **எதிர்மனுதார் தரப்பு எதிருரையின் சுருக்கம்**

மனுவில் கண்டுள்ள சங்கதிகள் உண்மைக்குப் புறம்பானவையாகும். மனுதார்களும் 4ம் பிரதிவாதியும் உடன்பிறந்த சகோதரர்கள் என்பதை நிரூபிக்க மனுதாரரே கடமைப்பட்டவர். 1ம் பிரதிவாதி மனுதாரரின் வழக்கறிஞரை நியமனம் செய்த நிலையில், வழக்கு நடவடிக்கை மேற்கொண்டு வரபட்டிருப்பதாக கூறுவதை நிரூபிக்க மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவராவார். மேற்படி 1ம் பிரதிவாதி, மேற்படி வழக்கும், 2, 3 பிரதிவாதிகளும் உடன்பிறந்த சகோதரர் ஆவார். மேற்படி எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒத்துழைப்பில்லாமல் இருந்து வருகிறது என்பதை நிரூபிக்க மனுதாரரே கடமைப்பட்டவர் ஆவார்கள். மேற்படி அசல் வழக்கில் 2, 3 பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ள தெய்வக்கனி, லட்சக்கனி ஆகியோர்கள் மேற்படி மனுதாரர்கள் மற்றும் இதர வழக்கு தரப்பினர்கள் மீதும் இதர வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்து அ.வ.எண்.278/2023 என்ற எண்ணில் நிலுவையில் இருந்து வருகிறது என்பதை நிரூபிக்க மனுதாரரே கடமைப்பட்டவராவர். மேற்படி மனுதாரர்கள் ஆண்டிபட்டி டி.மு.கோர்ட். அ.வ.எண்.99/2019 மற்றும் தேனி கூடுதல் மாவட்ட நீதிமன்ற வழக்கான அ.வ.எண்.278/2023 வழக்கு ஆகிய இரு வழக்குகளிலும் ஒரே வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வந்தோம் என்பதையும், மேற்படி மனுதாரர்கள் தரப்பில் தேனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கில் எதிர்மனுதாரர்கள் நியமித்த வழக்கறிஞர் ஆஜராகி எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவராவார். மேற்படி மனுதாரரின் தந்தைக்கு ஏற்பட்ட கடன் பிரச்சனைகள் காரணமாக குடும்பத்தில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டுவந்தது என்பதை மனுதாரரே

நிரூபிக்க வேண்டும். இந்நிலையில், 4ம் எதிர்மனுதாரர்/4-ம் பிரதிவாதிக்கு கடந்த 1 1/2 வருடங்களாக மஞ்சள்காமாலை நோய்க்கு நாட்டு மருந்து சிகிச்சைக்கு எந்த ஊரில் வைத்து சிகிச்சை பெற்றார். எந்த வைத்தியரிடம் சிகிச்சை பெற்றார் என்பதையும், கடந்த 1 1/2 வருடங்களாக நோய்க்கு சிகிச்சை செய்தார்கள் என்பதை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் கூறப்படவில்லை. அதனை நிரூபிக்க மனுதாரர் கடமைப்பட்டவராவார். மேற்படி மனுதாரர் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார் மற்றும் வெளிமாநிலங்களுக்கு லாரி ஓட்டுநராக சென்று அவ்வபோது சொந்த ஊருக்கு திரும்பிவருவேன் என்று கூறுவது உண்மைக்கு புறம்பானதாகும். மேற்படி மனுதாரர்கள் யாருடைய லாரியில் ஓட்டுநராக பணிபுரிந்தார் மற்றும் எந்த மாநிலத்திற்கு ஓட்டுநராக சென்றுவந்தார்கள் என்பதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மேற்படி மனுதாரரின் தந்தை 2024-ம் வருடம் தொடர்கடன் பிரச்சனை காரணமாக தற்கொலை முயற்சி செய்துகொள்ளும் நிலமைக்கு தள்ளப்பட்டு க.விலக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வந்தார் மற்றும் குடும்பத்தில் தொடர்ந்து பிரச்சனைகள் ஏற்பட்டு வந்தது என்பதை நிரூபிக்க மனுதாரரே கடமைப்பட்டவராவார். இந்நிலையில் 05-03-2024ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணங்கள் யாவும் உண்மைக்குப் புறம்பானவையாகும். மேற்படி உண்மை தன்மையினை நிரூபிக்க மனுதாரரே கண்டிப்பாக கடமைப்பட்டவராவார். எனவே, மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. இருதரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருதரப்பிலும் வாதுரை கேட்கப்பட்டது.

6. மனுதார்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எடுத்துரைத்து மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார். எதிர்மனுதார்கள் தரப்பில் வாதிட்டுள்ள கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் எதிருரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை எடுத்துரைத்து மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

7. மனுதார்களுக்கு எதிராக 12-02-2021ம்தேதியில் மனுதார்களின் ஆஜரின்மைக்காக அசல் வழக்கும் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். அசல் வழக்கில் 12-02-2021ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதார்கள் தரப்பில் 12-02-2021ம் தேதிக்குள் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதியாகும். அசல் வழக்கை மனுதார்கள் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். மனுதார்கள் தரப்பில் 12-02-2021ம்தேதியில் நீதிமன்றத்தில் எதிருரை தாக்கல் செய்ய அன்றைய தேதியில் 1ம்மனுதார்க்கு ஏற்பட்ட

மஞ்சள்காமாலை நோயினாலும் மற்றும் உடல்நலக் குறைவினாலும், நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத நிலை ஏற்பட்டு போனது என்பதே ஆகும். எனவே, 12-02-2021ம் தேதி ஏற்பட்ட 2ம்மனுதார் /5ம்பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி மனுதாரர்கள் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

8. இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும் வழக்குத் தரப்பினர்களுக்கு போதிய வாய்ப்பளித்து இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ரீதியாக வழக்கின் நற்கூறுகளின் அடிப்படையில் தீர்மானித்தால் மட்டுமே வழக்குத் தரப்பினர்களுக்குள் மேலும் பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் எழுவதையும் தடுக்க முடியும். மனுதார்கள் தரப்பில் மனுதார்கள் 12-02-2021ம் தேதி 1ம்மனுதார்க்கு ஏற்பட்ட மஞ்சள்காமாலை நோயினாலும் மற்றும் உடல்நலக் குறைவினாலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத நிலை ஏற்பட்டு போனது என்றாலும் அசல் வழக்கையும் அதன் நற்கூறுகளின் அடிப்படையில் தீர்மானித்தால் மட்டுமே வழக்குத் தரப்பினர்களுக்குள் பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் மேலும் எழுவதையும் தடுக்க முடியும். எனவே மனுதார்களுக்கும் ஒருவாய்ப்பளிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் நீதியின் நலன் கருதியும் 12-02-2021ம்தேதியில் 2ம்மனுதார்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவையும் 1ம்எதிர்மனுதார்க்கு செலவுத்தொகையை செலுத்துவதன் மூலம் சரிசெய்யலாம் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக மனுதார்கள் வரும் 20-12-2024 ம்தேதிக்கும் ரூபாய்.500 ஐ செலவுத் தொகையாக 1 ம்எதிர்மனுதார்க்கு செலுத்தும்பட்சத்தில் மனுவை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. தவறினால் மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 20-12-2024**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024 ம் வருடம் டிசம்பர் திங்கள் 17 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்).A.கண்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
ஆண்டிபட்டி.

இருதரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்- தாக்கல் இல்லை.

(ஒம்).A.கண்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
ஆண்டிபட்டி.